DINAMALAR
5 AUG 2022
PAGE 1


தினமலர்
# புதுச்சேரி
நமது ஊர் செய்திகளை தரும் நம்பர் 1 நாளிதழ்
www.dinamalar.com
www.facebook.com/Dinamalardaily
புதுச்சேரி ● வெள்ளி ● ஆகஸ்ட் 5, 2022


**செய்தி சாரல்** மாநிலத்தில் இதுவரை 9,81,192 பேர் முதல் டோஸ் தடுப்பூசி செலுத்திக் கொண்டனர்.

அதிகபட்சம் 33 °C
குறைந்தபட்சம் 26 °C
வானம் மேக மூட்டத்துடன் காணப்படும்.

# கடும் போட்டி

## ● புதுச்சேரி பல்கலை.,யில் மாணவர் சேர்க்கைக்கு...
## ● 3,700 இடங்களுக்கு 3.86 லட்சம் விண்ணப்பம்

புதுச்சேரி, ஆக. 5–

**புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் முதுநிலை படிப்புகளில் 3,700 சீட்டுகளுக்கு, இந்தாண்டு 3.86 லட்சம் பேர் விண்ணப்பித்து உள்ளனர். எனவே, சீட்டுகளை அதிகரிக்க நிர்வாகம் முடிவு செய்துள்ளது.**

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் இளநிலை, முதுநிலை, பிஎச்.டி., படிப்புகளில், 115க்கும் மேற்பட்ட பாடப்பிரிவுகள் உள்ளன. இந்தப் படிப்புகளுக்கு புதுச்சேரி பல்கலைக்கழகம், அகில இந்திய அளவில் தனியாக நுழைவுத் தேர்வு நடத்தி, மாணவர் சேர்க்கை நடத்தி வந்தது.

### 'கியூட்' நுழைவுத்தேர்வு

இந்தாண்டு, புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் உள்ள ஐந்தாண்டு ஒருங்கிணைந்த படிப்புகளான 10 படிப்புகளுக்கு மட்டும் மத்திய பல்கலைக் கழகங்களுக்கான 'கியூட்' நுழைவு தேர்வு மூலம் மாணவர் சேர்க்கை நடக்கும் என அறிவிக்கப்பட்டு, விண்ணப்பம் பெறப்பட்டது.

பின்னர், மற்ற முதுநிலை படிப்புகளுக்கும் கியூட் தேர்வு மூலமே சேர்க்கை நடத்தப்படும் என அறிவித்து, விண்ணப்பங்கள் பெறப்பட்டன. நாடு முழுவதும் இருந்து மாணவ மாணவியர் போட்டி போட்டிக் கொண்டு விண்ணப்பித்தனர்.

பல்கலைக் கழகத்தில் முதுநிலை படிப்புகளில் மொத்தம் 3,700 சீட்டுகள் உள்ளன. இந்த படிப்புகளுக்கு சராசரியாக ஆண்டிற்கு 40 ஆயிரம் விண்ணப்பங்கள் வரும்.

### 3.86 லட்சம் விண்ணப்பம்

ஆனால் இந்தாண்டு மத்திய பல்கலைக் கழகங்களில் மாணவர் சேர்க் ஆயிரம் விண்ணப்பங்கள் குவிந்துள்ளன.

பிளஸ் 2 முடித்த மாணவர்களுக்கான ஐந்தாண்டு ஒருங்கிணைந்த முதுநிலை படிப்பிற்கு 97 ஆயிரம் விண்ணப்பங்களும், மற்ற முதுநிலை படிப்புகளுக்கு 2,89,000 விண்ணப்பங்கள் குவிந்து, மலைக்க வைத்துள்ளது.

### சீட் அதிகரிக்க முடிவு

இந்தாண்டு விண்ணப்பங்கள் லட்சக்கணக்கில் குவிந்துள்ளதால் சீட்டுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க துணைவேந்தர் குர்மீத் சிங் உத்தரவிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, எந்த பாடப் பிரிவுகளில் சீட் எண்ணிக்கையை அதிகரிக்கலாம் என பல்கலை

### இரண்டாம் கட்ட தேர்வு

ஒருங்கிணைந்த ஐந்தாண்டு படிப்புகளுக்கு மட்டும் ஏற்கனவே முதற்கட்ட 'கியூட்' நுழைவுத் தேர்வு நடந்து முடிந்தது.

இந்த சூழ்நிலையில் இரண்டாம் கட்ட நுழைவுத் தேர்வு நேற்று துவங்கியது. காலை, மாலை என இரண்டு அமர்வுகளாக தேர்வு நடந்தது. வரும் 21ம் தேதி வரை இத்தேர்வு தொடர்ந்து நடக்கின்றது.

இடங்களை, இம்மாநில மாணவர்களுக்கு வழங்க ஒப்புக்கொண்டு, 1997ம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தி வருகிறது.

பல்கலைக் கழகத்தில் 22 பாடப்பிரிவுகளில் மட்டுமே இந்த இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது. 10 இளநிலை படிப்புகள் 'கியூட்' தேர்வுக்கு சென்றதால் 3 பாடப்பிரிவுகளில் இட ஒதுக்கீடு பறிபோய் விட்டது. அதனால், புதுச்சேரி மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு 19 பாடப்பிரிவுகளாக குறைந்துபோய் உள்ளது.

இச்சூழ்நிலையில் பல்கலைக்கழகத்தில் உள்ள முதுநிலை படிப்புகள் அனைத்துமே மத்திய கியூட் நுழைவுத் தேர்வுக்கு

DINAKARAN

5 AUG 2022

PAGE 12

# இந்திய-அமெரிக்க ஆராய்ச்சி திட்டம்

## துணைவேந்தர் தொடங்கி வைத்தார்



புதுவை பல்கலைக்கழகத்தில் இந்திய-அமெரிக்க ஆராய்ச்சி திட்டத்தை துணைவேந்தர் குர்மீத் சிங் தொடங்கி வைத்தார்.

புதுச்சேரி, ஆக. 5: புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களின் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்த மிகவும் அசாதாரண இயல்புடைய ஒரு புதிய ஆராய்ச்சி திட்டமான இந்திய-அமெரிக்க ஆராய்ச்சி திட்டத்தை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் தொடங்கி வைத்தார்.

இந்த திட்டம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்தும், அதனால் ஏற்படும் விளைவுகளை எவ்வாறு குறைப்பது என்பது குறித்தும் ஆய்வு செய்யும். இத்திட்டத்தின் தனித்துவமான அம்சம் என்னவென்றால், நிலக்கரி, டீசல் மற்றும் பெட்ரோல் போன்ற வழக்கமான எரிசக்தி ஆதாரங்களை போல் இல்லாமல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் தான் எப்போதும் தூய்மையானது மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்தது என்று உலகமெங்கும் நிலவும் ஆழமான கருத்துக்களுக்கு சவால் விடும் வகையில் இந்த திட்டத்தின் ஆராய்ச்சி அமையும். அமெரிக்காவின் டைவர் ஜென்ட் பாத்ஸ் பவுண்டேஷன் என்ற நிறுவனம், இந்த ஆராய்ச்சி திட்டத்துக்கு ரூ.35 லட்சம் நிதியை வழங்கியுள்ளது. இந்த ஆராய்ச்சி திட்டம், சர்வதேச அளவில் சுற்றுச்சூழல் சார்ந்த தெழில்நுட்ப ஆராய்ச்சி அரங்கில் தங்களுடைய பல்வேறு ஆராய்ச்சிகளால் வியக்கத்தக்க வகையில் மிகச்சிறப்பான அங்கீகாரத்தை பெற்றும், சுற்றுச்சூழல் சார்ந்த ஆராய்ச்சிகளில் முன்னோடியாகவும் திகழ்ந்து வரும் ஓய்வுபெற்ற பேராசிரியர் அப்பாசி மற்றும் புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் உதவி பேராசிரியர் தஸ்னீம் அப்பாசி ஆகியோரால் மேற்கொள்ளப்படுகிறது.